இரத்த தானம்

* 245 வினா.—திரு. பெ. சௌந்தரபாண்டியன் : மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத்துறை அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) இரத்த தானம் செய்வோருக்கு தற்போது எவ்வளவு நன்கொடை தொகை வழங்கப்படுகிறது ?

(இ) இது எப்போது நிர்ணயிக்கப்பட்டது ?

மாண்புமிகு திரு. க. அன்பழகன் : (அ) அரசு மருத்துவமனைகளில் குருதி வழங்குவோருக்கு தற்போது ரூபாய் பத்து நன்கொடையாக வழங்கப்படுகிறது.

(இ) இத்தொகை 26—4—1971-ல் நிர்ணயிக்கப்பட்டது.

திரு. பெ. சௌந்தரபாண்டியன் : ரத்தம் வழங்குவோருக்கு வழங்குகின்ற தொகையை மேலும் கூடுதலாக்க அரசு ஏதாவது பரிசீலனை செய்து கொண்டிருக்கிறதா ?

மாண்புமிகு திரு. க. அன்பழகன் : அவர்களிடமிருந்து குருதி விலைக்கு வாங்குவதாக இப்பொழுது சொல்லப்படவில்லை. குருதிக் கொடை, தானம் என்றுதான் சொல்லப்படுகிறது. தானம் தருவதற்கு ரூ. 10 தருகிறோம். தானம் தருகிற மாட்டை பல்லைப் பிடித்து எண்ணக்கூடாது.

திரு. த. சோனையா : தலைவர் அவர்களே, குருதி தானம் பெறுகிறார்கள் ஆஸ்பத்திரியில் சில ஏழை எளிய மக்களுக்கு குருதி செலுத்த வேண்டிய நேரத்தில் குருதி கிடைக்கவில்லை. வாங்கித் தாருங்கள் என்றும், குருதி கொடுப்பதற்கு இவ்வளவு கட்டணம் செலுத்தவேண்டும் என்று கேட்கிற நேரத்தில் ஏழை எளிய மக்கள் பணம் கொடுத்து தங்கள் உடலில் குருதி செலுத்திக்கொள்ள முடியாத ஆபத்தான நிலை உண்டாகிறது. ஆகவே, ஏழை எளிய மக்களிடமிருந்து எதையும் எதிர்பாராமல் இதைச் செய்வதற்கு ஏற்பாடு செய்வார்களா ?

மாண்புமிகு திரு. க. அன்பழகன் : மருத்துவமனையில் வைத்து சிகிச்சை வழங்கும் எந்த நோயாளியிடமும் குருதிக்காகக் கட்டணம் கேட்பதில்லை. ஒரேவிதமான குருதி எல்லோருக்கும் செலுத்தப்பட முடியாது. அவரவர் உடல் ரத்தத்தினுடைய குரூப்புக்கு ஏற்ப, ஒத்துக்கொள்ளக்கூடிய ரத்தத்தைத்தான் செலுத்த முடியும். அந்த குரூப் ரத்தம் மருத்துவமனையில்

கைவசம் இல்லாவிட்டால் யாரிடமாவது பெறவேண்டும். அப்படி அதை வழங்குவதற்கு யாரும் வராதபொழுது, யாரைக் கொண்டாவது ரத்தம் தரக்கூடியவர்களை அழைத்து வரவேண்டிய நிலைமை பல இடங்களில் ஏற்படுகிறது.

சென்னை விமான நிலையம்

*246 வினா.—திரு. என். கிட்டப்பா: மாண்புமிகு பொதுப்பணித்துறை அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) சென்னை விமான நிலையத்தை விரிவுபடுத்தக் கோரி மத்திய அரசிடம் மாநில அரசு வலியுறுத்தியுள்ளதா?

(இ) ஆம் எனில், அதன் விவரம் என்ன?

மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம்: (அ) & (இ) இல்லை. இருந்தபோதிலும் இந்திய அனைத்து நாட்டு விமான நிலையங்கள் அதிகாரமன்ற இயக்குநர் இவ்வரசுக்குப் பின்வருமாறு தெரிவித்துள்ளார்:

உள்நாட்டு விமானப் போக்குவரத்து, அனைத்து நாட்டு விமானப் போக்குவரத்து ஆகிய இவ்விரு தேவைகளையும் நிறைவு செய்யும் வகையில் தற்போதுள்ள விமானப் பயண முனைக்கட்டிடத்தில் (Terminal building) சில முக்கிய மாறுதல்கள் செய்யப்பட்டுள்ளன. இப்பணிக்கு ரூ. 41 லட்சத்திற்கு மேல் செலவாகியது. விமான ஒரு பாதைகள் தரை ஓட்டப் பாதைகள் (Taxi-tracks) விமான தள ஓர்ப்பாதைகள் (Apron) முதலியவற்றிலும் முக்கிய மாறுதல்கள் செய்யப்பட்டுள்ளன. சென்னை விமான தள மேம்பாட்டிற்காக நான்காவது ஐந்தாண்டுத் திட்டத்தின் முதல் நான்காண்டுகளில் மொத்தம் ரூ. 175 லட்சம் செலவிடப்பட்டுள்ளது. 1973-74-ல் குடியிருப்புக் கட்டிடங்கள் கட்டுதல் உட்பட சென்னை விமான தளத்தில் நடைபாதைகள், விமானப்பயண முனைக்கட்டிடம், சாலைகள் வெளிப்புறப் பணி வசதிகள், துணை வசதிக் கட்டிடங்கள் ஆகியவற்றிற்கு மேம்பாடுகள் செய்யவும் ஏனைய பல்வகைப் பணிகளை நிறைவேற்றவும் இந்திய அனைத்து நாட்டு விமான நிலையங்கள் அதிகார மன்றத்திடம் திட்டங்கள் உள்ளன. இத்திட்டங்களை நிறைவேற்ற ரூ. 84.92 லட்சம் அளவிற்குச் செலவாகும்.

2. ஐந்தாவது ஐந்தாண்டுத் திட்டத்தில் மேலும் பல மேம்பாட்டுப் பணிகளை மேற்கொள்ளவும் இந்திய அனைத்து நாட்டு விமான நிலையங்கள் அதிகார மன்றம் கருதுகிறது. இவற்றுக்குரிய விரிவான விவரங்கள் தயாரிக்கப்பட்டு வருகின்றன.